SEND IN YOUR NEWS TO

THE EDITOR
THE MORNING STAR
NO: 39, FUSSELS LANE,
COLOMBO - 06,
SRI LANKA.

# THE MORNING STAR

*Registered as a News Paper at the General Post Office, Sri Lanka*

*Established 1841. A Christian Fortnightly Published Every other Friday*

**Vol. 164 - Jaffna - Friday 14th January 2005 No.01**

*Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people*

THE MORNING STAR:

| | |
|---|---|
| Annual Subscription - foreign | $ 10.00 |
| Life Subscription Foreign | $ 100.00 |
| Annual Subscription Local | Rs. 100.00 |
| Life Subscription - Local | Rs.1000.00 |

THE MORNING STAR
NO: 39, FUSSELS LANE,
COLOMBO - 06,
SRI LANKA.

## "Brave one, God is with you."

**Judges 6:12**

*Sermon delivered by Rt. Rev. Dr. S. Jebanesan, Bishop in Jaffna, at the Installation Service of Mrs. Shiranee Mills as principal of Uduvil Girls College, on 18th December, 2004.*

Mrs. Shiranee Mills, sisters and brothers in Christ, we are gathered to seek God's blessings on Mrs. Shiranee Mills who will be assuming duties as principal of Uduvil Girls' College from the first of January 2005.

It is difficult to know what kind of service or ceremony there was 180 years ago when Mrs. Harriet Winslow, the first principal of Uduvil who started this school, was installed. No doubt Rev. and Mrs. Spaulding, Dr. & Mrs. Scudder, Dr. & Mrs. Poor and the other missionaries of that time would have been there. Today Mrs. Mills is installed as the 8th principal of Uduvil Girls' College. I have selected a verse from the Book of Judges – Like all the great leaders in the Lord's vineyard. Gideon was also reluctant to accept the call for service. God knew all his weaknesses, yet God wanted him. God chooses us, not because of what we are but what we can become by accepting God's grace. It was Emil Brunner the famous theologian of the 20th century who said it is a great mystery of God that men do not become strong until they know their weakness and expect all things from the power of God.

Before I give my message to the 8th principal of Uduvil Girls' College, I wish to say something about the 7th principal namely Dr. C.V.Selliah. I was not here when the College accorded a farewell to Dr. Selliah on the 10th of December, 2004. Dr. Selliah had been principal of Uduvil Girls' College for 23 years and has been associated with this institution for 45 years. When she took charge of this College in 1983, Uduvil was on a low key. There were only 400 students. From 1983 Jaffna changed hands so many times but during this period Uduvil became one of the best Girls' Schools in Jaffna. Dr. Selliah will go down in history as the principal who ran Uduvil most efficiently during the most difficult times. She can look back with satisfaction at what she has done for the schoool and the Diocese during these past 23 years. On behalf of the Diocese and on behalf of my predecessors, I wish to thank her most sincerely for her services to Uduvil and the Christian community.

Two years ago Mrs. Shiranee Mills expressed her willingness to come to Jaffna and take charge of Uduvil. I thought it would be wonderful if Mrs. Mills became the next principal. She is the type of person whom we would love to have as the principal of Uduvil. She is an old girl of this school, daughter of a C.S.I. pastor and a daughter-in-law of another C.S.I. pastor. She holds a B.A. degree with English as a subject and M.A. in Women's Studies. She is a licentiate of the Trinity College of Music London.

Mrs. Mills is an excellent orator both in English and in Tamil and a prolific writer. So we are happy that Mrs. Mills has agreed to be the 8th principal of Uduvil Girls' College. From today the Mills era begins at Uduvil. Now what shall I tell Mrs. Mills? You are going to be principal for another 10 or twelve years. Please spell out to us what your plans are. What you are going to do during your tenure as principal. Determination on set objectives is what marked out great men and women.

We are happy that you have come with a great vision for the students, the teachers, old girls and the community. You have been sharing your ideas with me during the past two years.

We are really proud that the new principal holds an M.A in Women's Studies. In India Women's Studies is given much importance. During my visit to India I found the principals of Lady Doak College, Madurai, Women's Christian College – Madras and Bishop Cotton Women's Christian College, Bangalore holding a degree or a certificate in Women's Studies. Educationists believe that the heads of Girls Schools must be qualified in women's studies.

The last American principal, of Uduvil Miss Lulu Bookwalter in one of her speeches said, " We have been able to do the little that we have done as we kept to our motto, '*The truth shall make you free*'. Knowledge of truth shall make you free. I am reminded of a group of girls whom I found in the compound one afternoon. When I was walking past them they looked up to me, and I said to them, "What is it girls? What do you want? " One of them said, "We want freedom." I asked them, what do you want to do? Another girl replied, "We want to go out of the front gate, and have a walk all by ourselves. " I asked whether they were not afraid to go. They told me that they were quite prepared to go alone, and I said, "Go." They went out, walked down the road and came back.

But what we have endeavored to teach at Uduvil, with the help of the teachers here, is not alone that freedom which would make it possible for the girls to go out of the front gate all alone, but it is the freedom of the inner spirit; the freedom of the mind; that freedom which comes to the mind through a knowledge of truth."

Uduvil has played am important role in the educational advancement and cultural development of the girls of Jaffna It is important that girls should study in a girls school. When they go to mixed schools the boys don't allow them to lift their heads. In an election the men see women as their common enemy. Do you think, the women leaders of the South Asia, Mrs. Bandaranaike and Mrs. Jeyalalitha Jeyaram would have become great leaders if they had studied in mixed schools?

Uduvil has produced strong and upright women. Dr. Telfer Mooke when he was appointed Secretary for the Asia Desk in the common global ministries visited South Asia and met with the Women's Fellowships in India and Jaffna. He was amazed to see the confidence, diction and poise of the women of Jaffna. He expressed his delight when he spoke about it to Bishop Ambalavanar, he said "Uduvil made all the difference." Mrs. Mills your main task should be to make the girls confident and upright – for that is the mark of Uduvil.

When Mrs. Ariam Paramasamy was principal of Uduvil Girls College, Sir John Kottelawala, the Prime Minister of Ceylon visited Uduvil. After seeing the smartness of Uduvil Girls, he said, "In my next birth I would like to be born as an Uduvil girl." Mrs. Mills all the old girls from Vancouver to Oak land in New Zealand are watching you with hope and expectation. We are confident that you will take Uduvil to greater heights. There will be pressure for admission and appointment from various quarters. Once Mr. K. Pooranampillai told me "Administration means the ability to say no to your best friend."

I also wish to share with you a thought given by Dag Hammarskjold in Markings "When the morning's freshness has been replaced by the weariness of midday, when the leg muscles quiver under the strain, the climb seems endless, and suddenly nothing will go quite as you wish – it is then that you must not hesitate."

In the words of Tennyson we say to Shiranee Mills – "Even though the path may be dark as night – courage sister do not stumble, Trust in the Lord and do the right."

Be assured of our prayers and the goodwill of the Uduvil community. "Brave one, God is with you."

## Subramaniam Kanagam Memorial Pleasant Cottages

A beautiful elders home with the name Subramaniam Kanagam Memorial Pleasant Cottages at Inuvil Hospital premises was declared opened by the Rev. S.N. Sugunananthan a former minister of the Jaffna Diocese of the Church of South India, on the 29th November 2004. The Bishop dedicated the building for the glory of God.

A meeting followed in the main hall of the building presided over Mr. N.A. Vimalendran the chairman of the Medical Board of the Diocese.

Rev. S.N. Sugunananthan and his brother Bishop S. Jebanesan spoke about their parents with much love and affection.

Rev. S.N. Sugunananthan handed over a sum of One Million Rupees collected from the members of Subramaniam family to Mrs. Beverly Watson the Australian Missionary the manager of the home.

## 125th Anniversary of Moolai Church

Members of the CSI Church in Moolai are making arrangements to celebrate its 125th anniversary which falls on the 23rd March 2005.

The renovated Parsonage will be rededicated and declared opened on the 4th February 2005. The Rev. T.S. Joshua and his family will move into this house on the first of February 2005. The Rev. S.N. Sugunananthan had made a contribution of Rs. 200,000 for the restoration of the Parsonage.

### Home Coming of Jesuthasans

Mr. Thevananthan Jesuthasan (Son of the Rev. A.V. Jesuthasan of C.S.I Church Anaicoddai and Mrs. Jesuthasan) and his bride Dilani were given a reception at the Parsonage Anaicoddai on Sunday the 26th December. A praise service was conducted by the Rev. Jude Sudharshan. Bishop Jebanesan gave his greetings to Thevananth his former student and the bride Dilani.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# PASTORAL MESSAGE TO THE WCC MEMBER CHURCHES IN SOUTH AND SOUTH EAST ASIA AND OTHER COUNTRIES AFFECTED BY THE TSUNAMI

Dear Brothers and Sisters in Christ,

On behalf of the entire fellowship of the World Council of Churches we send you sincere condolences and express our sorrow at the loss of more than 125,000 thousand lives n one of the deadliest natural catastrophes that has faced the people of South East Asia and regions surrounding the Indian Ocean. We are also aware that the devastating earthquake followed by the tsunami has left more than five million people homeless who are in dire need of immediate humanitarian aid as well as psychological and spiritual accompaniment.

With our deepest sympathy we pray and think of those who have lost their loved ones. We are greatly encouraged by the exemplary efforts of our member Churches in responding even with meager resources to bandage the wounded and bond with the sorrowful. In prayer, we yearn to God that we may all overcome this cosmic anguish together with all peoples of faith in the region. The WCC together with our partners in ecumenical disaster and emergency management will continue to reach out with the resources available at our disposal to prevent more human suffering and bring about relief to those in this great affliction. Please let us know in what other ways you would wish the global ecumenical community to be in solidarity with you as you try to come to terms with this unprecedented catastrophe.

During this holy season we have witnessed through liturgy and the sacred narratives of the birth of our Lord Jesus Christ that even in the face of so many contradictions in life God is still part of our broken world. The miracle of the incarnation reminds us in the most profound way of the dwelling presence of God that transforms even probabilities of annihilation into new possibilities of life in history. And now we must reach out to one another, and not only weep with those in anguish but also make a new place for those seeking shelter as we struggle to find lasting solutions to future tragedies in this world. One lesson to learn from this tsunami tragedy is the need for the international community and the religious communities to unite in one spirit and reinvent the capacity for preparedness to face such tragedies together. It is also a moment to be re-awakened to our God given responsibility to care not only for one another but for the health of the creation as well.

On the eve of the New Year may God's grace be with you, comfort you, and give you peace in 2005 and beyond.

Yours in Christ,

H.H. Catholicos Aram I
Moderator

Rev. Dr. Samual Kobia
General Secretary

31st December, 2004.



Photograph taken after the Jaffna College Board of TRUTEES Meeting on 23-10-2004

## Matrimony

*The Wedding of PETER JEYARAJAH son of Mr. GUNARATNAM JEYARAJAH and the Late SAROJINI JEYARAJAH of Vaddukoddai to CHRISTINA daughter of MR. FRANCIS PHILIPS and MRS. CHRISTALINE PHILIPS of London took place on Monday the 27th December 2004, at Sacred Heart Church, Quex Road, London. The wedding service was followed by a reception at the VIP Lounges, 47, High Street, Edgware, London.*

# CHRISTMAS 2004

Lord,
it is Christmas
and I am wrapped in a shawl of memories
embroidered with feelings
of excitement
of days gone by
of carols and coloured lights
of greetings and family reunions
of fellowship and laughter
filling us with the spirit of Christmas.
But the enchantment
is fading fast,
as I watch a broken world
of bloodshed and violence
of bitterness and hatred
of crime and deceit
spreading their wings
while hunger and poverty
ignorance and disease
cry out for help,
and powerless humanity
and disappearing creation
strive to live on technology
for survival.
Lord,
May Your love and forgiveness
grow mightily in our lives
making the river of Your Mercy
bear along the star shining cradle
of Him who was born at Christmas
to save and redeem us.
O King of Kings,
O Prince of Peace
May Thy kingdom come
with healing power,
to paint this disturbed world
with ribbons of rainbows
to light us our lives
with hope.

SAVITHRI DEVANESEN

## OBITUARY

### MRS. Thavamany Arulanantham

The death occurred on Friday the 7th January of Mrs. Thavamany Arulananthan wife of the late Alfred Arulanantham of Navaly. She leaves behind her daughter Dr. Arulvathany (U.S.A) and her son Thavaranjit. (Lecturer Dept of Botany, University of Jaffna)

The funeral was conducted at her residence at Navaly on the following day by the Rev. A.S. Thevagunananthan assisted by the Rev. A.V. Jesuthasan. The burial took place at the CSI Church Navaly.

### Mrs. D.J. Selvantha and Ahash Selvantha

We are sorry to record the death of Dilani Jeyaranjini Selvantha the wife of our worker-in-charge at Periya neelavanai (E.P) and Ahash her infant son which took place under tragic circumstances on Sunday the 26th December at Periya Neelavanai in the Ampara District. Dilani and Ahash were carried away by the Tsunami wave immediately after the Sunday Morning Service. A memorial service was conducted at her parent's residence at Kacheri-Nallur Road, Jaffna on Wednesday the 5th January 2005.

### Mr. Edward Vethaparanam Gnanapragasam

Mr. Edward Vethaparanam Gnanapragasam the brother of the late A.T. Vethaparanam died on Sunday the 9th January at his residence at Sillalai. He was the father of the late Perinpanayagam and the late Michael.

Mr. Gnanapragasam was living with his relation at Pandateruppu after a minor accident on the 9th of January 2004.

The funeral took place on the following day at Sillalai. The Rev. D.S. Solomon parish minister Vaddukoddai conducted the service and preached the sermon.

The Rev. T.S. Joshua gave the tribute. The remains were than removed to Vaddukoddai Cemetery for interment.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயதாரகை 14.01.2005

எவ்வித லட்சியமுமில்லாமல் வேலை செய்வது எண்ணெய் இல்லாத விளக்கிற்குச் சமம்.

- யோகி - வேமனா. -

# துன்பக்கேணி

**விம்மி விம்மி விம்மி விம்மி யழுங்குரல்**
**கேட்டிருப்பாய் காற்றே! - துன்பக்**
**கேணியிலே யெங்கள் பெண்க ளழுதசொல்**
**மீட்டு முரையாயோ - அவர்**
**விம்மி யழவுந் திறங்கெட்டுப் போயினர்.**

- மகாகவி பாரதி -

பிஜித் தீவுக் கரும்புத்தோட்டத்திலே இந்தியக் கூலிப் பெண்கள் பட்ட துன்பத்தைப்பற்றிப் பாரதியார் இவ்வாறு பாடினார்.

இன்று இலங்கைத் தீவிலுள்ள சுனாமி அகதிகளைப் பார்க்கும் பொழுது பாரதியாரின் பாடல்தான் ஞாபகத்திற்கு வருகின்றது.

தென்னாசியாவிலும் தென்கிழக்கு ஆசியாவிலும் சுனாமி அனர்த் தத்தினால் இரண்டு இலட்சம் பேர் மாண்டிருக்கலாம் என்று அஞ்சப்படு கின்றது. இதில் வேதனை தரும் விஷயம் என்னவென்றாற் பாதிக்கப்பட்டவர் களிற் பெரும்பாலானவர்கள் ஏழை மீனவர்கள்!.

**"ஏழை எளியதுகளோடை தான்**
**காற்றுக்கும் கோபம் கடவுளுக்கும் சண்டை"**

என்று ஒரு சிறுகதை ஆசிரியனின் வசனம் மனதிற்கு வருகின்றது. காற்றோடும், கடலோடும் போராடிச் சீவியத்தை நடத்தும் ஏழைமக்கள் கடலுக்கு இரையானார்கள்.

அகதி முகாம்களிலே சித்த சுவாதீனம் அற்றவர்கள் சிலர். இரவு முழுவதும் நித்திரையின்றித் தவிப்பவர்கள் வேறுசிலர். தமது கணவனோ, மனைவியோ எப்படியாவது திரும்பி வந்துவிடுவார்களென்ற ஆசையை வளர்த்துக்கொண்டிருப்பவர்கள் இன்னுஞ்சிலர். பெண்களின் சோகக் கதை கல்மனதையும் கசியவைக்கும். கவிமணி அன்று பாடினார் :-

**"இவள் கணவனை இழந்த கைம்பெண் அம்மா**
**இவள் தந்தையை இழந்த தமியள் அம்மா**
**இவள் மைந்தனை இழந்த வறியவள் அம்மா**
**இவள் தமயனை இழந்த தங்கை அம்மா**
**இவள் மாமனை இழந்த மருகி அம்மா**
**இவள் அன்னையை இழந்த அகதி அம்மா**
**இறந்தவர் எண்ணிலர் இருப்பவர் சிலரே."**

மக்கள் இவ்வாறு இயற்கைச் சீற்றத்தினால் அல்லற்படும் பொழுது நாம் சில உண்மைகளை உணர்ந்து கொள்ளவேண்டும்.

கடலின் மடியிலும் நிலத்தின் அடியிலும் இருக்கும் எண்ணெய் வளங்களைச் சுரண்டிச் சமுத்திரத்தாயின் மடியை வெப்பமடையச் செய்தது யார்? எண்ணெய் வளத்தை எடுத்து எரியூட்டிப் பூமியின் வெப்பத்தை அதிகரிக்கச் செய்தது யார்? செல்வத்திற் புரளும் குபேர நாடுகளே பூமித் தாயின் அடியிலிருக்கும் பாதுகாப்பு அரண்களைத் தகர்த்தவர்கள்!

சமுத்திரத்தின் அடியிலேயே பூகம்பம் ஏற்பட்டது!! இராட்சத அலைகள் தோன்றி ஏழைநாடுகளை நாசப்படுத்தின.!!!

அடுத்து நாம் இந்த அனர்த்தத்தினால் குளிர்காய முயற்சிக்கும் அரசுகளையும் மக்களையும் எண்ணிப் பார்க்கவேண்டும்.

மரித்துப் போனவர்களின் உடல்களைக் கீறி நகைநட்டுக்களை அபகரித்தவர்கள் எத்தனை பேர்?

எந்த விதமான பாதிப்பும் இல்லாதிருந்த போதிலும் அகதி முகாம் களுக்குச் சென்று வாழ்ந்து இலவச போசனமும் உடுபுடைவைகளும் பெற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்?

இதுதான் மனிதனின் இழிநிலை.

**"சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில்**
**சாதல் கண்டும் சிந்தை இரங்கார் அடி கிளியே"**

எந்தத் துன்ப சூழ்நிலையிலும் தம்மை மேம்படுத்திக் கொள்ளவே இவர்கள் நினைப்பார்கள்.

இப்படிப்பட்ட சுயநலவாதிகளிடமிருந்தும் சுரண்டும் குபேர நாடுகளி டமிருந்தும் கண்ணீர் வடிக்கும் ஏழைமக்களை இறைவன் காப்பாராக.

## செல்வி தங்கம்மா அப்பாகுட்டியின் 80வது பிறந்த தினவிழா

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த தினவிழா ஜனவரி மாதம் 7-ம் திகதி தெல்லிப்பழையிற் கொண்டாடப்பட இருக்கின்றது. அதே தினம் ஜேர்மனி, இங்கிலாந்து, கனடா ஆகிய நாடுகளிலும் அம்மையாரின் பிறந்த தினக் கொண்டாட்டம் நடைபெறுமெனத் தெரிகிறது. தெல்லிப்பழையில் அன்று

"சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம்"
"வாழ்க எம் அன்னை"

என்ற இரண்டு நூல்கள் வெளியிடப்பட இருக்கின்றது.

## 'சுப்பிரமணியம் கனகம் ஞாபகார்த்த மகிழ்ச்சி இல்லம்'

## 'SUBRAMANIAM AND KANAGAM' MEMORIAL PLEASANT COTTAGE

2004ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ந் திகதி மேற்படி இல்லம் இணுவில் வைத்தியசாலையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதனை அவுஸ்ரேலியாவில் இருந்து வந்த நமது முன்னாள் திருச்சபை ஊழியன் வண. S.N. சுகுணா னந்தன் திறந்து வைத்தார். இவரும், இவரது சகோரரர்களும் இந்த இல்லத்தை நடத்துவதற்காக ஒரு மில்லியன் ரூபா வழங்கினார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. ஞாபகார்த்த நடுகல்லைப் பேராயர் எஸ். ஜெபநேசன் திறந்து வைத்தார்.

பின்னர் நடைபெற்ற பகிரங்கக் கூட்டம் ஆதீன மருத்துவ நிர்வாக சபையின் தலைவர் திரு. நோயல் A. விமலேந்திரன் அவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வண. S.N. சுகுணானந்தனும், பேராயர் எஸ். ஜெபநேசனும் தமது பெற்றோரை நினைவு கூர்ந்து மிகவும் உருக்கமாகப் பேசினார்கள்.

இந்த இல்லத்தை நடாத்தும் பொறுப்பினை அவுஸ்திரேலியாவில் இருந்து வந்த மிஷனரியாகிய திருமதி Berrevly Watson அவர்கள் மேற் கொண்டு இருக்கின்றார்.

# மரணத்தைப் பற்றி இவர்கள்

வாழ்வில் மூன்றிலொரு பங்கு துக்கத்தில் கழிந்தாலும் மரணம் என்ற சொல் மனிதர்களை அழ வைக்கிறது. - பைரன். -

நாம் பிறக்கும்போதே இறக்க ஆரம்பித்து விடுகிறோம். முடிவு துவக்கத்துடன் பிணைக்கப் பட்டுள்ளது. - மனிலியஸ் -

தவிர்க்க முடியாத ஒன்றைப் பற்றி ஏன் வீணாகக் கவலைப்படுகிறீர்கள்? இறப்பு வருமுன்பே ஏன் இறக்கிறீர்கள்? - மனிலியஸ் -

தவிர்க்க முடியாத ஒன்றைப் பற்றி ஏன் வீணாகக் கவலைப்படுகிறீர்கள்? இறப்பு வருமுன்பே ஏன் இறக்கிறீர்கள்? - மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி -

ஒருவன் இறந்தால் அது துன்பம்தான்; லட்சக்கணக்கானவர்கள் இறந்தால் அது புள்ளியல் கணக்கு. - ஜோஸப் ஸ்டாலின் -

கடும் உழைப்பிற்குப் பின் தூக்கம்; கடும் புயலில் சிக்கிய கப்பல் கரை சேருதல்; போருக்குப் பின் அமைதி; வாழ்விற்குப் பின் இறப்பு முதலியன மிகுந்த மகிழ்சியைத் தரும். - எட்மண்ட் ஸ்பென்ஸர் -

மரணம் ஒரு மனிதனை அழித்துவிடும்; ஆனால் மரணத்தைப் பற்றிய எண்ணம் வாழ்வை அழித்து விடும். - ஈ.எப். பார்ஸ்டர் -

மரணம் ஒரு முக்காடு; உயிருடன் இருப்பவர்கள் அதை வாழ்க்கை என்கிறார்கள். அவர்கள் உறங்கும்போது முக்காடு விலகிவிடுகிறது. - பீ.பி. ஷெல்லி -

மரணத்தைக் கொச்சைப்படுத்துவது ஒன்றில்தான் நம்மால் முழு வெற்றி காண முடிவதில்லை. - ஆல்டஸ் ஹக்ஸ்லி -

இந்த வாழ்க்கையே வெறுத்துவிட்டது; முதுமையின் சோர்வும் சலிப்பும் தாங்க முடியவில்லை. நான் மரணத்துடன் கை கோர்த்துக் கொண்டு நடக்கிறேன். அதன் கை என்னுடையதைவிட மென்மையாக வெது வெதுப்பாக உள்ளது. இனி நான் வாழ விரும்பவில்லை. - டபுள்யூ. சாமர்செட் மாம் -

மரணத்தைப் பற்றி நான் பல முறை சிந்தித்திருக்கிறேன்; மற்ற அனைத்துத் தீமைகளைவிட மரணம் மிக அற்பமானது என்று தெரிந்து கொண்டேன். - ஃபிரான்சிஸ் பேகன் -

நிலைப் பேறுடைமை எனும் மாளிகையின் பொற்சாவியே மரணம். - ஜான் மில்ட்டன் -

மரணம் என்பது என்ன? உடலில் உடலைத் தவிர வேறு ஒன்றும் இல்லாவிட்டால் அணுக்கள் சிதைவு வருவதுதானே? உயிர் என்பது வேறாயின், அதுவும் வேறு உடலுக்குச் செல்லும் அல்லது முடிவடையும். - மார்க்கஸ் ஒளரேலியஸ் -

மரணத்தைத் தவிர மற்ற எல்லாவற்றிற்கும் இப்போது பரிகாரம் உள்ளது. - பிகெல்-டி-கெர்வெண்டெஸ் -

மரணம் இறுதித் தூக்கமா? இல்லை இறுதியும் கடைகியுமான விழிப்பு. - சர். வால்ட்டர் ஸ்காட் -

மரணத்தைக் கண்டு ஏன் அஞ்ச வேண்டும்? வாழ்க்கையில் மிக அழகான வீரச் செயல் அதுதான். - சார்லஸ் ஃப்ரோமான் -

கடவுளின் விரல் அவனைத் தொட்டது; அவன் தூங்கி விட்டான். - டென்னிஸன் -

மரணத்தைவிட மிக அழகான நிகழ்ச்சி வேறெதுவும் நடக்க முடியாது. - வால்ட் விட்மன் -

மிகவும் களைப்பு. அவன் தூங்கினான்; வாழ்க்கை எனும் எளிய நாடகம் முடிந்தது. - போப் -

முதலில் நமது இன்பங்கள் மடிகின்றன; அடுத்து நமது நம்பிக்கைகள்; அதன் பின் நமது பயங்கள். இவையெல்லாம் இறந்தபின் கடன் பாக்கியுள்ளது. மண், மண்ணிடம் உரிமை கோருகிறது - நாமும் இறந்து விடுகிறோம். - பீ.பி. ஷெல்லி -

மனிதர்களைப் போல வாழ மரணம் அத்தியாவசியத் தேவை என்றால் மரணம் அடைவதில் என்ன தவறு? - ரவீந்திர நாத் தாகூர் -

அவலமான வாழ்க்கையைவிட புகழ் வாய்ந்த மரணம் மேல். - யூதப் பழமொழி -

உன் மரண காலத்தில் நீ விட்டுச் செல்வது தகராறுக்கு இடம் இல்லாமல் இருக்கட்டும். இல்லாவிட்டால் உன் சொத்துக்களுக்கு வக்கீல்களே உன் வாரிசுகளாக விளங்குவார்கள். - ஆஸ்போரீன் -

மரணம் யோகிகளை ஏதுவும் செய்வதில்லை. விழிப்புற்ற இதயம் உறக்கத்திற்கு அஞ்சுவ தில்லை. உன் ஆத்மா உடலைவிட்டுச் சென்றால் என்ன? தோல் பழசாகிவிடும்போது பாம்பு அதை உரித்து எறிந்து விடுகிறது. - தாராஷீ குஹ் -

தம்மை ஆதரிப்பவர்கள் அழும்படி, ஒருவன் மரணத்தைப் பெறமுடியுமானால் அந்த மரணத்தை இரந்து வேண்டிப்பெற வேண்டும். - வள்ளுவர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயற்கை விபத்துக்களைக் கடவுள் ஏன் தடுக்கவில்லை?

நிலநடுக்கம், எரிமலை, இடி, புயல், வெள்ளம் முதலியன இயற்கையின் சாதாரணச் செயல்கள். அவை மக்களை அழிப்பதற்காக ஏற்படுவதில்லை. இவை ஏன் ஏற்படுகின்றன என்று நம் முன்னோரைவிட நமக்கு நன்றாய்த் தெரியும். உலகின் மேற்பரப்பு சுமார் ஐம்பது மைல் கனமுடையது. அது மண்ணாலும் பாறையாலும் ஆனது. சுவற்றை இடித்து அதன் செங்கல், சுண்ணாம்பு, கல் முதலியவற்றை ஒரு குழியிற் கொட்டினால் ஊடே ஊடே சந்துகள் ஏற்படும். மழை விழுந்தபின் இந்தச் சந்துகள் நிமித்தம் சரிவு ஏற்படும். அதனால் அசைவு ஏற்படும். அக்குழியின் மேல் மரம், செடி இருந்தால் அவைகளும் சாயும், இது போலவே பூமிக்குள் இருக்கும் சந்துபொந்துகளால் சில சமயங்களிற் சரிவு ஏற்படும். அதனால் நிலநடுக்கம் ஏற்படும்.

மிகத்தாழ்வான தரைப்பகுதிகளுக்கருகே உயரிய மலைகளிருப்பின், அங்குதான் நிலநடுக்கம் ஏற்படுகிறது. வடஅமெரிக்கா, தென்அமெரிக்கா, பசுபிக் கடற்கரைகள், கிரேட்பேசினுக்கு மேற்கிலுள்ள பகுதிகள், ஜப்பானியக் கடற்கரைப் பகுதிகள், கிழக்கிந்தியத் தீவுகள், மேற்கிந்தியத் தீவுகள், மத்திய பசுபிக பகுதி, இமயத்தின் தென் கோடிப் பகுதி, இத்தாலி, கிரிஸ் முதலிய மலைநாடுகள் முதலியவைதான நிலநடுக்கப் பகுதிகள். இங்குதான் எரிமலைகளும் ஏற்படுகின்றன. ஆண்டொன்றுக்குச் சுமார் எண்ணாயிரம் நிலநடுக்கங்கள் உண்டாகின்றன. பலத்த நிலநடுக்கத்தின்போதுகூட நிலத்தின் மேற்பரப்பு அரை அங்குலத்திலிருந்து இரண்டங்குலம் வரைதான் படுக்கை வசமாக நகர்கிறது. அதன் விளைவாக மேற் பரப்பிலுள்ள இருபதடி மண் மேலே குதிக்கிறது. சேதம் உண்டாகிறது.

ஆனால் நிலநடுக்கத்தால் வீடுகள் இடியினும், உயிர்ச்சேதம் ஏற்படாத வகையில் வீடுகள் கட்ட இன்றைய இன்ஜினியர்கள் நூதன முறைகள கண்டுள்ளார்கள். சிஸ்மா கிராப் உதவியால் நில நடுக்கம் ஏற்படும் இடம், காலம் முதலியவற்றை முன்னரே அறியமுடியும். உயிர் தப்பவும் முடியும். அப்படியே புயலும் வெள்ளமும் 1755 முதல் 1956 வரை ஏற்பட்டுள்ள நில நடுக்கங்களால் மடிந்தவர் புள்ளி விபரம்.

| | |
|---|---|
| 1755 இல் லிஸ்பனில் | 40,000 |
| 1886 இல் சார்ல்ஸ்டனில் | 27 |
| 1891 இல் ஜப்பானில் | 7;279 |
| 1906 இல் சான்பிரான்சிஸ்கோவில் | 700 |
| 1908 இல் கலாபிரியா, சிசிலி | 76,000 |
| 1915 இல் மத்திய இத்தாலியில் | 30,000 |
| 1917 இல் கவுதமாலாவில் | 2,500 |
| 1920 இல் மெக்ஸிக்கோவில் | 3,000 |
| 1920 இல் சீனம் | 200,000 |
| 1923 இல் ஜப்பான் | 160,000 |
| 1929 இல் பாரசீகம், ருசியதுர்க்கிஸ்தான் | 20,000 |
| 1929 இல் நியூபவுண்ட்லந்து | 26 |
| 1931 இல் நியூபவுண்ட்லந்து | 250 |
| 1934 இல் பீகார், ஒரிஸா | 7,000 |
| 1935 இல் குவெட்டா | 30,000 |
| 1939 இல் சிலி | 25,000 |
| 1939 இல் துருக்கி | 45,000 |
| 1956 இல் கட்சு | 120 |
| மொத்தம் 201 ஆண்டுகள் | |
| இறந்தவர்கள் மொத்தம் | 628,932 |

201 ஆண்டுகளில் நிலநடுக்கத்தால் இறந்தவர்கள் தொகை 628,932. ஆனால் 4 ஆண்டுகளில் முதல் உலகப்போரில் டிடிந்தவர் தொகை 90 இலட்சம். காயப்பட்டவர் தொகை சுமார் 27,000,000. இயற்கை தன் கடமையைச் செய்கிறது. அதற்கு ஒதுங்கித் தப்பவேண்டியது மக்கள் கடன். இயற்கையாலேற்படும் சேதத்தை விட மனிதனே வருவித்துக் கொள்ளும் போரால் வரும் சேதம் அதிகம். இது மெய்தானா என்று மேலே கண்ட புள்ளிவிவரத்தை வைத்துக் கணித்துப் பார்க்கவும். இயற்கை தன் கடமைகளைச் செய்யும்போது கடவுள் குறுக்கிட்டால் இயற்கை ஒழுங்கு கெடும்.

---

## கேட்கப்படும் கேள்விகளும் தரப்படும் விடைகளும்

**ஒவ்வொரு ஜெபமுடிவிலும் "இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே வேண்டிக் கொள் ளுகிறோம்" என்று சொல்வதேன்? அவர் கடவுள் அல்லவா? பின் ஏன் அவர் மூலம் ஜெபிக்கவேண்டும்?**

இவ் வினாவின் முதற் பகுதிக்கு விடை எளிது. யோவான் 15:6ல் "நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கொள்வது எதுவோ, அதை அவர் உங்க ளுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், உங்களை ஏற்படுத்தினேன்" என்று இயேசுநாதரே கட்டளையிட்டிருப்பதாலேயே எல்லா ஜெபத்தின் இறுதியிலும் "இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே கேட்டுக் கொள்ளுகிறோம்" என்று ஜெபிக்கிறோம். (யோவான் 14:14, 6:33 காண்க.)

கிறிஸ்து திரித்துவத்தில் ஒருவர் பிதா, குமாரன், பரிசுத்தாவி என்பதே திரித்துவம். திரித்துவம் என்பது யாது என்றறிய மகாகனம் நீயூபிகின் அத்தியட்சர் அவர்கள் இயற்றிய பாவமும் இரட்சிப்பும் என்ற நூலில் 43ம், 44ம் பக்கங்களை வாசித்தறியுங்கள்.

**தம் கருத்துக்கு விரோதமான கருத்துக் கொண்ட பரிசேயர் வேதபாரகரைக் கொடிய சொற்களால் இயேசு தாக்கியது சரியா?**

ஒரு சொல்லின் மெய்ப்பொருளை எழுத்துவடிவால் மட்டும் அறியமுடியாது. ஏனெனிற் பவணந்தி முனிவர் கூறுகிறபடி "எடுத்தல், படுத்தல், நலிதல்" பேச்சில் விரவியிருக்கும் 'வாடா' என்று கோபமாகவும் கூறலாம்; குழந்தையைப் பார்த்து 'வாடா' என்று அன்பாகவும் அழைக்கலாம். எழுத்து வடிவிலிருக்கும் 'வாடா' என்ற சொல்லை வாசிப்பதால் அது கோப மொழியா அல்லது அன்பு மொழியா என்று தீர்மானித்தல் கடினம். ஒருவர் பேச்சின் மெய்ப்பொருளை அறிய அவர் எத்தகைய முகக்குறிகள் காட்டினார் என்றறிய வேண்டும். ஒருவர் பேச்சு அவர் பேசியபடியே எழுதப்பட்டிருக்கிறதா? என்றறிய வேண்டும். இயேசுவின் காலத்தில் பேச்சுப்பதிவுப் பொறிகள் தோன்றவில்லை. அல்லது அக்காலத்தில் சுருக்கெழுத்தாளர் இருந்ததும் இல்லை; இயேசுநாதருக்குப் பின் பல ஆண்டுகட்குப் பிறகே சுவிசேஷங்கள் எழுத்துவடிவில் வெளியாயின; எனவே பல ஆண்டுகட்குப்பின் நினைவிலிருந்து எழுதப்பட்ட இச்சொற்கள் மெய்யாகவே இயேசு நாதருடையவைகளா? எழுதியவர் சொற்களா? என்று வரையறுத்துக் கூறுவது கடினம். 'இயேசு நாதர் பேசியவை யனைத்தும் இன்னும் ஆகாசத்தில் உள. அவற்றை அவர் பேசியவாறே பதிவு செய்யும் பொறிகள் கண்டு பிடிக்கும் காலம் வரும்' என்று விஞ்ஞானிகள் நம்புகின் றனர். இவை தவிர இயேசு கோபங்கொண்டு பேசியவைகளே இவை என்று வாதித்தாலும்கூட, அவர் கோபம் நம்கோபத்திலும் வேறுபட்டது. அவர் கோபம் அங்கீகரிக்கப்படாத அன்பு, நீதிக்கோபம். ஆனால் நம் கோபமோ நம் பலவீனம். தம்மைச் சிலுவையிலறைந்தவர்களைக்கூட மன்னிக்குமாறு. 'பிதாவே, இவர்களுக்கு மன்னியும். தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே' என்று ஜெபித்த இயேசுநாதர், பரிசேயர் வேதபாரகரைப் பகைக்கும் எண்ணத்தோடு கொடிய சொற்களைப் பிரயோகித்தார் என்பது பொருந்தாது.

**சன்மார்க்கம் ஆளுக்கு ஆள் நாட்டுக்கு நாடு வேறுபடுவதேன்?**

எது சன்மார்க்கம் எது துன்மார்க்கம் என்று சோதிக்கும் உரைகல் இயேசு கிறிஸ்துவே. அவரவர் வழிபடும் தெய்வத்தின் குணங்களைப் பொறுத்தே அவரவர் சன்மார்க்கமும் உருவாகும். மேலும் சமுதாயமும், உடல் அமைப்பும், இயற்கைச் சூழ்நிலையும் குண பேதங்களை உண்டாக்கும். போர்னியாப் பூர்வகுடிகள் வீடுகளில் எதிரிகள் தலைகளை எவ்வளவு தொங்க விடுகிறார்களோ அவ்வளவிற்கும் வீரம் என்பர். எஸ்கிமோ ஜாதியார் சொற்பேரில் வெல்வதே வீரம் என்பர். வேறு சிலர் யார் எதிரிக்கு அதிகப்பணம் கொடுக்கிறாரோ அவரது செயலே வீரம் என்பர். பழந்தமிழர் மார்பில், முகத்தில், விழுப்புண்படுவதே வீரம் என்பர். இயேசுநாதர் தியாகம் செய்வதே வீரம் என்று காட்டினர். சிலர் பலதாரமே சரியென்பர். பலர் ஒருதாரமே சரியென்பர். சிலர் பல புருடருக்கு ஒரு மனைவி சரியென்பர். திபேத்தியர், பண்டைய மலைநாட்டினர், பாண்டவர் போன்றவர்கள். எனவே கிறிஸ்துவை அளவு கோலாக, மாதிரியாகக் கொண்டு உலகோர் ஒழுகுங்காலம் வரும்போதுதான் உலகில் ஒரேவித சன்மார்க்கம் அமையும்.

**கிறிஸ்தவமும், செல்வ வளமும் என்பதின் கருத்து யாது?**

இதைப்பற்றி எமது கருத்து எவ்வகையாக இருந்தாலும், கிறிஸ்துவின் கருத்தே எதற்கும் முடிவானது. எனவே இதைப்பற்றி இயேசுகிறிஸ்துவின் கருத்து யாது என்பதை விளக்குவோம். கடவுள் உலகில் வீணாவது ஒன்றுமில்லை. மேசையிலிருந்து விழும் உணவுத் தூள்களும்கூட நாயக்குட்டிகட்கும் எறும்பு, ஈ முதலிய உயிரினங்கட்கும் உதவுகின்றன. வழியில் விழும் விதைகள் கூடப் புள்ளினங்கட்குதவுகின்றன. சகல கழிவுப் பொருட்களும் நிலத்தை வளப்படுத்து கின்றன. அழுகி ஒழுகி விழும் கனிகளும், சருகாயுதிரும் இலைகளும்கூட அவற் றைத் தந்த தருவினங்கட்கு உரமாகின்றன.

இயேசுநாதர் 'எல்லாருக்கும். மட்டும் இரட்சகரல்லர்' 'எல்லாவற்றிற்கும் இரட்சகர்.' தேடவும் இரட்சிக்கவுமே அவர் வந்தார். ஒரு சொல்லால் நீரைத திராட்சை ரசமாக்குவார். ஒரு சிறு விதையைப் பல விதைகளாகப் பெருக்குவார். ஐந்தப்பம் இரண்டு மீனால் ஐயாயிரம் பேரைப் போஷிப்பார். ஆயினும் "ஒன்றும் சேதமாய்ப் போகாதபடிக்கு மீதியான துணிக்கைகளைச் சேர்த்து வையுங்கள்" என்பார். காணாமற் போன ஆட்டை, காசை, மனிதனைத் தேடிக் கண்டு பிடித்துச் சேர்க்குமாறு விரும்பு வார். தாம் மக்கட்குத்தந்த வரப்பிரசாதங்களை அவர்கள் பன்மடங்காக விருத்தி செய்வதை விரும்புவார். பயன்படுத்தாமை, பயன்படாமை இயேசுவின் கண்டனத்திற்கும் தெய்வ தண்டனைக்கும் உட்படும் கருத்தில்தான் "தகுதியுள்ளவை நிலத்தில்" என்ற பரிணாம சித்தாந்தமும் இயேசுவின் போதனையும் ஒன்றுபடுகின்றன. கவலைப் படாதீர் என்பதன் மெய்ப்பொருள் இன்றைக்குரியதையும் நாளைக்குரியதையும் குழப்பி வீண் கவலைப்படேல் என்பதேயாம். பறவைகள் போற் பக்தர் கவலையி னின்றும் விடுதலைபெறுவதையே விரும்புகிறார் ஆயினும், பறவைகளும்கூட தம் குஞ்சுகட்காக முட்டையிடு முன்னரே முன் எச்சரிக்கையாயுள. நாம் முன் ஜாக்கிரதை யாயிருக்குமாறு கடவுள் தந்த இயற்கை போதிக்கிறது. எறும்பு கோடை காலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து அறுப்புக் காலத்தில் தனக்குத் தானியத்தைச் சேர்த்து வைக்கும்' (நீதி 6:8). இயேசு சிக்கனத்தைப் பாராட்டுகிறார். அவநம்பிக்கை யையும் வீண் கவலையையுமே அவர் கண்டனம் செய்கிறார்.

இயேசுவின் தொண்டரிடம் பணப்பையுமிருந்தது; பரம இராஜ்யப்பணிக்காக (யோர்வா.12:6). சில சமயங்களில் அது தேவைப்படாதிருந்தாலும் (மத். 10:9) தேவையானபோது அது பயன்படுத்தப்பட்டது. (யோ. 13:29.)

மனிதன் தனக்கிருப்பதை விருத்தி செய்ய வேண்டியவன். பின்பு தேவன் அவர்களை நோக்கி 'நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, அவர்களை ஆசீர்வதித்தார்.' (ஆதி. 1:28) இதுவே வேதம் கூறுகிறபடி கடவுள் மனிதனிடம் முதல் முதல் பேசிய வார்த்தை. இயேசுவும் கருத்தைத் தாலந்துகளின் உவமையில் வற்புறுத்துகிறார். (மத். 25:14-30) செலவிடும் விதங்கள் :- முதலாவது, கடவுளிடம் பெற்றதில் ஒருபகுதியைக் கடவுள் பணிக்களித்தல். "உன் பொருளாலும், எல்லா விளைவின் முதற்பலனாலும் கர்த்தரைக் கனம் பண்ணு" (நீதி 3:9) இரண்டாவது உயிர் வாழ்வதற்கின்றியமையாதவற்றிற்காகச் செலவிடல். மூன்றாவது உழைக்கப் பலனற்றபோது உயிர் வாழ்வதற்காக மீத்தல். ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன்வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் தன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" (தீமோ. 5:8) 'எல்லா மனுஷருக்கு முன்பாகவும் யோக்கியமானவைகளைச் செய்ய நாடுங்கள்' (ரோமர் 12:17) பவுலும் கூடாரத்தொழில் செய்கிறவனானபடியினாலே, அவர்களிடத்தே தங்கி வேலை செய்து வந்தான். (அப். 8:3) மீத்து வைப்பது பதுக்கி வைத்தலாய் மாறக்கூடாது. அது பேராசை. அது பாவம் என்று ஆதி. 3:17, ஆதி. 19:25, மத். 6:32, ஏரே. 6:13, யோசு. 7:24, ஆதி. 31:41, எண். 22:21, யோ. 2:15, யூதா. 1:14, சாமு. 15:9, 1 இரா. 21:17, 11, இரா. 5:20, மத்தேயு 27:3, அப். 5:3, கொலோ. 3:5, 1, தீமோ. 6:10, லூக். 12:13, 24, மத். 6:19 முதலிய பகுதிகள் எடுத்துக் காட்டுகின்றன.

**மீண்டும் இயேசுகிறிஸ்து வருவாரா? வருவாராயின் எப்போது? எப்படி வருவார்?**

இயேசுகிறிஸ்து மீண்டும் வந்து உலகை நியாயந்தீர்ப்பார் என்பதே புதிய ஏற்பாட்டின் முடிவு. ஆனால் அவர் எப்போது வருவார்? எப்படி வருவார் என்பது எவருக்கும் தெரியாது. அவர் உலகில் தீமையை ஜெபித்துச் சரித்திரத்திற்கு முடிவு கட்டுவார். கடவுள் இராஜ்யத்தை நிலைநாட்டுவார்.

வருங்காலம் எவரும் அறியார். சுவிசேஷம் உலகெங்கும் பிரசங்கிக்கப்பட்ட பிறகே மறுவருகை இருக்கும். யூதர்கள் சேர்க்கப்படுவார்கள், தீமை உச்சநிலைஅடைந்து நன்மை வெற்றி பெறும். திடீரென்று எதிர்பாராத வேளையில் வருவார். கண்ணுக்குத் தெரிய வருவார். உலகை நியாயம் தீர்ப்பார். கிறிஸ்துவே நீதிபதி.

ஆயினும் இயேசுநாதர் ஆவியாக எங்கும் எப்பொழுதம் பிரசன்னமாயிருக் கிறார். துன்பங்கள் மத்தியிலும் துக்க மேகங்களிலும் அவர் வருகிறார். இவை நம்மை அவரிடம் நெருங்கிச் சேரச் செய்யும். தூதர்கள் என்று யார் விசுவாசிக் கிறாரோ அவருக்கு அவர் காட்சியளிக்கிறார் என்பதையும் மறக்கலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திருமதி டிலானி ஜெயரஞ்சினி செல்வந்தா, செல்வன் ஆகாஷ் செல்வந்தா ஆகியோரை நினைவுகூரும் ஆராதனை 05-01-2005 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அவ் ஆராதனையில் பேராயர் S. ஜெபநேசன் ஆற்றிய அருளுரை பின்வருமாறு:-**

**திருமறைப் பகுதி 2 சாமுவேல் 12:16-23 வரை**

டிசம்பர் மாதம் 26ம் திகதி நான் சாவகச்சேரியில் அருளுரையாற்றினேன். அன்றும் சிறிய அலைகள், பெரிய அலைகள் தோன்றி மறைகின்றன என்றும், நாம் எல்லாரும் சிறிய அலைகள் என்று கூறினேன். மகா அலெக்சான்டர், யூலியஸ் சீசர், நெப்போலியன், அண்ணல் காந்தி போன்றவர்கள் பெரிய அலைகள், இயேசு கிறிஸ்து இப்படி ஒரு அலையாக எழும்பி மறையவில்லை யென்றும் கூறினேன்.

அதே ஞாயிறு பெரிய நீலாவணைத் தேவாலயத்தில், திரு. S. செல்வந்தா ஆராதனையை நடாத்தினார். அன்று கிறிஸ்தவ குடும்பத்தைப் பற்றி அவர் அருளுரையாற்றினார். ஆராதனை முடிந்து சபையார் வெளியேறும் பொழுது பனை அளவு உயரமாக அலை ஒன்று கிழக்கில் இருந்து வந்தது. வழிபாட்டுக்கு வந்தவர்கள் சிதறி ஓடினார்கள். ஆலயத்தின் போட்டிக்கோவில் குழந்தையோடு நின்ற திருமதி செல்வந்தாவை அலை அடித்துக் கொண்டு சென்றது. அதன் பிறகு அவர்களின் உடலை உயிருடனோ, உயிர் இல்லாமலோ காண முடிய வில்லை.

சென்ற வருடம் செப்டெம்பர் மாதம் பெரிய நீலாவணை ஆலயச் திறப்பு விழாவுக்கு மட்டக்களப்புக்குச் சென்ற பொழுது திருமதி செல்வந்தா வையும், குழந்தை ஆகாஷையும் கண்டேன். அக் குடும்பம் மகிழ்ச்சியாகவும், சம்பூரணமாகவும் இருந்தமையைக் கண்டு பூரிப்படைந்தேன்.

சமுத்திரம் கொந்தளித்து அனேக அனர்த்தங்களை உண்டாக்கிவிட்டது. தரிசனகாரர் சமுத்திரத்தைத் தீயசக்திகளின் உறைவிடமாகவே கருதினார். புதிய வானமும் புதிய பூமியும் உருவாகின்றபொழுது சமுத்திரம் இருக்கமாட்டாது என்று தரிசனம் கண்டார். **"வெளி: 21:1"**

சங்கீதகாரருக்குக் கடலின் பேரலைகள் இறைவனின் வல்லமையையே உணர்த்தின.

**"தேவரீர் சமுத்திரத்தின் பெருமையை**
**ஆளுகிறவர்; அதின் அலைகள்**
**எழும்பும்போது அவைகளை**
**அடக்கப் பண்ணுகிறீர்"**

**சங். 89:9**

ஆனால் மத்தேயு, நற்செய்தி நூலில் "இறைவன் கடலில் எழுந்த புயலை அடக்குமுன்னர், மனிதனுடைய உள்ளங்களிலே எழுந்த புயலை அடக்கினார்" என்று வாசிக்கிறோம்.

"ஏன் பயப்பட்டீர்கள். உங்கள் விசுவாசம் எங்கே போயிற்று" என்று சீடர்களைப் பார்த்துக் கேட்டார். மத். 8:24. இன்று கடற் கொந்தளிப்பு அடங்கி விட்டது. ஆனால் மனிதருடைய உள்ளங்களில் இருந்த புயலோ அடங்கவில்லை.

இன்று நம்மைச் சோகம் பீடித்துள்ளது. உள்ளத்திலே அலைகள் முறுகின்றன. ஏனென்றால், பிரிவு எப்பொழுதுமே துன்பத்தைத் தருகின்றது. அதிலும் எங்களுக்கு இனிமையானவர்களை இனி இந்தப் பூவுலகத்திலே காணமாட்டோமென்று நினைக்கின்றபொழுது சோகம் மேலிடுகின்றது.

ஆண்டவரே, உமது செய்கைகள் விளங்கவில்லையே என்று நாம் ஏங்குகிறோம். அமெரிக்காவிலே செப்டெம்பர் 11ம் திகதி நிகழ்விற்குப் பின்னர் பலர் குழப்பம் அடைந்திருந்தனர். பாதிக்கப்பட்ட ஒரு பெண்மணி "நான் கடவுளோடு பேசுவேன், ஆனால் இப்பொழுது அல்ல," என்று கூறினார். தன்னு டைய மகளைக் காப்பாற்றவில்லையென்று கோபம். யோபுவும் இப்படியாகத்தான் கடவுளோடு கோபித்துக் கொண்டார்.

கடவுள் தன்னுடன் நீதியாக நடந்து கொள்ளவில்லை என்று குமுறினார். ஆனால் கடவுளுடைய சத்தத்தைக் கேட்டவுடன் அவருடைய கோபமெல்லாம் மறைந்து போய்விட்டது. மனுஷனுடைய சிற்றறிவினாற் கடவுளுடைய வழிகளை அறிந்துகொள்ள முடியாது என்று உணர்ந்து, கடவுளிடம் மன்னிப்புக் கேட்டார்.

**"அறிவில்லாமல் ஆலோசனையை**
**மறைக்கிற இவன் யார்?**
**ஆகையால் நான் எனக்குத்**
**தெரியாததையும் என் புத்திக்கு**
**எட்டாததையும், நான் அறியா**
**ததையும் அலப்பினேன் என்கிறேன்"**

**- யோபு 42:3 -**

"விசுவாசம் என்பது விளங்குவதும், விளங்காததும் உறுதியானதும், உறுதியற்றதும், நிச்சயமும், அநிச்சியமும் இறுதியில் விசுவாசம் முழுவதுமே மர்மத்தில் மூழ்கிக் கிடக்கிறது" என்றார். இறையியல் அறிஞர் **Soren Kierkegaard.** இதனை அவர் ஆபிரகாம் வரலாற்றிலிருந்து விளக்கினார். ஆபிரகாமை அழைத்தார். உனது சந்ததி பலுகிப் பெருகும் என்றார். பின்னர் அவனுடைய ஒரே மகனைப் பலியிடுமாறு கூறினார். இதனையே நாம் விளங்குவ தும், விளங்காததும் என்று கூறுகிறோம்.,.

மரணத்தைப் பற்றி **Tennyson** என்ற ஆங்கிலக் கவிஞர் ஓர் அழகான கருத்தை முன் வைத்துள்ளார்.

**இறைவா நீ மனிதனைப் படைத்தாய்**
**அவன், தான் சிரஞ்சீவியாய் இருக்கப்**
**படைக்கப்பட்டவன் என்று எண்ணுகிறான்.**
**ஆனால் நீர் அவனைச் சிருஷ்டித்தீர்;**
**நீர் நீதிபரர்.**
**எம்மை சிருஷ்டித்தவர் நீதிபரர் என்று எண்ணும்போது**
**நாம் எதனைக் குறித்தும் அஞ்சத்**
**தேவையில்லை.**

PUBLIC LIBRARY

1912ம் ஆண்டு ரைற்றானிக் **(TITANIC)** என்ற பாரிய கப்பல் அட்லாண்டிக் சமுத்திரத்தில் மூழ்கிக் கொண்டிருந்தது. பயணிகள் ஓடியோடி உயிர்காக்கும் வள்ளங்களில் இடம்பிடித்துவிட முயன்றனர். ஆனால் கப்பலின் "இசைக்குழு" மட்டும் **(Band)** அஞ்சவேயில்லை. அவர்கள் மேல் தளத்தில் நின்று கெம்பீரமாக உம்மண்டை தேவனே நான் சேரட்டும் என்ற பாடலை இசைத்துக் கொண்டே மூழ்கிப் போயினர்.

இன்று செல்வந்தாவுக்கும், மரித்துப் போனவர்களின் உறவினர்களுக்கும் தாவீதின் அனுபவத்தையே முன் வைக்கின்றேன்.

தாவீது ராஜா, மகனை இழந்த பின்னர் தனது வாழ்க்கையை உற்சாகத் தோடு மீண்டும் ஆரம்பித்தார். அவருக்கு மூன்று உண்மைகள் தெரிந்திருந்தன.

1. தனது மகனை இந்த பூவுலகத்தில், "நான் இனிக் காணப் போவதில்லை. நான் இனி அவன் இருக்குமிடம் செல்வேனேயொழிய அவன் நான் இருக்குமிடத்திற்கு வரமாட்டான்.
2. நான் அவனை மீண்டும் முகமுகமாகச் சந்திப்பேன்.
3. அப்பொழுது எனது குதூகலம் இரட்டிப்பாய் இருக்கும்."

இந்த நம்பிக்கையோடு செல்வந்தா பயணத்தை தொடர வேண்டும். மலையகத்தில் நற்செய்திப் பணிசெய்த ஒரு கண்காணி தன்னுடைய 6 பிள்ளை களையும் ஒரு தொற்றுநோய் காரணமாக இழந்துவிட்டார். ஆனால் தொடர்ந்தும் அதே உற்சாகத்தோடு நற்செய்திப் பணி செய்தார். அவருடைய செய்கைக்கு விளக்கங் கேட்டபொழுது, அவர்

**"கர்த்தர் என்னுடைய சபையில் இருந்து ஆறு பேரை எடுத்துக் கொண்டார். எனவே இன்னும் ஆறு பேரைப் புதிதாக எனது சபையிலே சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆகையினாலேதான் நான் நற்செய்திப் பணியாற்றுகிறேன்" என்றார்.**

---

# பெருமை தேடாதே

பேசுவார் பெருமையாய் மேடையில்
ஊரார் நாலுபேர் நல்லது என்றால்
நற்குணம் ஆடுவார் இவர் மேடையில்
பேர் கொடுப்பார் ஊரார் பெரிய பேச்சாளன் என்று.

பேச்சுக்கும் செயலுக்கும் பெரிய இடைவெளி
உண்டு நிறைய ஊர் அறியும்
கண்டும் காணாதது போலிருக்கும்
ஊர் கொடுத்த பேராச்சே அது.

பேசுவார் பிறர் செய்யட்டுமென்று
செய்யார் இவர் பச்சோந்தி
பொய்யர் இவர் பச்நோந்தி
செய்கை அறியா சேர்ப்பார் பெருமை.

அருமையான பெருமை அற்றகால்
கருமையான மை முகத்தில் பூசப்படுங்கால்
உரிய உண்மைச்சாயல் வெளிப்படுங்கால்
அருகி கருகும் வாழ்வின் கோலம்
முத்தமிழ் வித்தகர்

**முத்தமிழ் வித்தகர்**
**ஆ. வே. இயேசுதாசன்.**

---

## மூளாய் திருச்சபையின் 125வது வருட நிறைவு விழா

1880ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட மூளாய் திருச்சபை, இந்த வருடம் தனது 125வது வயது நிறைவைக் கொண்டாடுகின்றது.

பெப்ரவரி மாதம் 4ம் திகதி இந்த நிகழ்ச்சிகள் நடைபெற இருக் கின்றன. அன்று புனரமைப்புச் செய்யப்பட்ட குருமனை திறந்து வைக்கப்பட வுள்ளது. இதனையொட்டி ஒரு மலரினை வெளியிடவும் அதன் ஊழியர் வண. T.S. யோசுவா முயற்சி செய்து வருகின்றார்.

---

# செய்தித் தொகுப்பு

### வரவேற்பு உபசாரம்

நமது திருச்சபையின் ஆனைக்கோட்டை ஊழியன், வண. A.V. இயேசுதாசன், காலஞ்சென்ற திருமதி இயேசுதாசன் ஆகியோரின் சிரேஷ்ட புதல்வன் திரு. தேவானந் அவர்களுக்கும் அவருடைய மணமகள் டிலானி அவர்களுக்கும் ஒரு வரவேற்பு உபசாரம் ஆனைக்கோட்டைக் குருமனையில் டிசம்பர் மாதம் 26ம் திகதி நடைபெற்றது. வண. யூட் M. சுதர்சன் ஆரம்ப வழிபாட்டை நடாத்தினார். அதனைத் தொடர்ந்து பேராயர் S. ஜெபநேசன் மணமக்களுக்கு நல்லுபதேசம் கூறினார். ஐக்கிய மதிய போசனத்தில் தென் இந்தியத் திருச்சபை ஊழியர்களும், மற்றும் நண்பர்களும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானம்

# "என் சமுகம் உன்னோடு கூட வரும்..."

பழைய ஆண்டு கடந்து விட்டது. புதிய ஆண்டினுள் புகுந்துள்ளோம். நம்மை விட்டுக் கடந்து போன 2004ஆம் ஆண்டை நாம் நினைக்கும்போது இப் புதிய ஆண்டு எவ்வண்ணமிருக்குமோ என்ற திகிலே எல்லார் மனதிலும் குடிகொண்டிருக் கிறது. இந்நாட்டு மக்கள் மட்டுமன்றி எல்லா நாடுகளிலும் கடந்த ஆண்டு பல விதமான இன்னல்களையும் கலக்கங்களையும் விளைவித்திருக்கிறது. 2004ம் ஆண்டு கழியும்போதும் எல்லார் மனதிலும் அச்சத்தையும் கலக்கத்தையுமே விட்டுப் போயிருக் கிறது. நாளைக்கு நடப்பதென்ன என்பதைத் திட்டமாகக் கூற முடியாத நிலையிற்றான் நாம் வாழ்கின்றோம். நாம் எதிர்பாராத மாறுதல்கள் விரைவில் நடைபெறுகின்றன. எதிர்காலத்தில் ஏதாவது நன்மை இருக்குமோவென்ற எண்ணந்தான் நம் மனங்களில் அடிக்கடி உதிக்கிறது. உலகமெங்கும் திகிலும், பயமும், கலக்கமும் நிறைந்துள்ள இந்நாட்களில் விபரீதமான இயற்கை மாறுதல் களும் தோன்றி மக்களை வருத்துகின்றது. இவ்விதமான பயங்கரச் சூழ்நிலை யிலிருந்தே நாம் புதிய ஆண்டினுள் புகுந்துள்ளோம்.

பலவிதமான நெருக்கடிகள் நம்மைச் சூழ்ந்துள்ள போதிலும், உலக வரலாறு கடவுளின் கையில் இருக்கிறதென்பதை நாம் மறந்து விடக்கூடாது. இவ்வுலகத்தைப் படைத்த கடவுள் தாமே இவ்வுலகின் ஒப்பற்ற இராஜாவாகத் திகழ்கிறார். இதை உணர்ந்து அறிபவர்களே நெருக்கடிகள் மத்தியிலும் அமைதியை நாட முடியும், விசுவாசத்தின் உறுதியைப் பெற முடியும். "ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்" என்று ஆபகூக் தீர்க்கதரிசியைப்போல் தைரியமாகக் கூற முடியும். இப் புதிய ஆண்டில் நமக்கு என்னென்ன விளையுமோ, நமது சபைக்கு, நமது நாட்டிற்கு என் னென்ன நேரிடுமோவென நாம் திகிலுடன் நோக்கும்போது, "என் சமுகம் உன்னோடு கூட வரும்"... பலங்கொண்டு திடமனதாயிரு; திகையாதே கலங்காதே. நீ போகு மிடமெல்லாம் உன் கடவுளாகிய கர்த்தர் உன்னோடிருக்கிறார்" என்ற வாக்குத் தத்தந்தான் நமக்கருளப்படுகிறது.

புதிய ஆண்டினுள் நுழைந்துள்ள நாம், இதற்கு முன்னே நாம் ஒருபோதும் நடவாத வழிக்குள் நடக்கப்போகிறோம். ஆகவே கடவுளின் சமுகம் நம்முடனே வருகிறதென்ற நிச்சயத்துடன் வருங்காலத்தைப் பற்றிய பயம், திகில், கலக்கம் யாவற்றையும் அகற்றிக் கிறிஸ்துவுக்குச் சாட்சியாக நாம் ஒளிரவேண்டியதவசியம்.

இப்புதிய ஆண்டில் நம் நாட்டுத் திருச்சபை, கிறிஸ்துவே நம் நாட்டின் இரட்சகர். இன்று நம் நாட்டைச் சூழ்ந்துள்ள இருளை அகற்ற வல்லமெய்யான ஒளி அவரே, அவரே நம் நாட்டின் பிரச்சனைகளைத் தீர்க்க வல்லவர் என்ற உண்மையை அயராமல் தளராமல் நமது நாட்டுக்கு எடுத்துக் கூறவேண்டிய பொறுப்பைப் பெற்றுள்ளது என்பதை உணர்தலவசியம். தனித்தாட்களாகவும் நாம், நமது குடும்பங்களிலும் சமுதாயத்திலும் இருக்கும் பயத்தையும், திகிலை யும் அகற்றுவதற்கேற்ற முறையில், கடவுளின் சமுகம் நம்மோடிருக்கிறதென்ற உண் மையை நமது வாயினால் மாத்திரமல்ல, நமது வாழ்க்கையினாலும் காட்ட வேண்டும்.

இவ்வுலகத்தில் நடப்பனவற்றைக் கண்டும் காணாதவர்போல் கிறிஸ்தவர் களாகிய நாம் இருக்கமுடியாது. நாம் விரும்பாவிடினும் உலக நிகழ்ச்சிகளுள் நாம் தள்ளப்படுகிறோம். ஆகவே, இக்காலத்திற் பரிசுத்தாவியானவரின் அனல் இல்லாமற் குளிர்ந்த நிலையிற் சுயதிருப்தியுடன் இருக்கிற கிறிஸ்தவர்கள் சிறி தேனும் பயன்படமாட்டார்கள்; இப்படிப்பட்டவர்களின் ஆலோசனைகள் உலகத்துக் கேற்றதாகவேயிருக்கும். எவ்விதமான எதிர்ப்புகள் மத்தியிலும், 'கிறிஸ்துவே இவ் வுலகிற்கு ஒளி,' என்றும் 'கிறிஸ்துவே உலகத்தின் இரட்சகர்,' என்றும் உறுதியுடன் செயல் புரியும் திருச்சபையாக, கிறிஸ்தவனாக, "இதோ, யுகமுடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்" என்ற ஆண்டவர் நம்மை விட்டுவிலகவும் மாட்டார் நம்மைக் கைவிடவும் மாட்டார்; என்ற நிச்சயத்துடன் இப்புதிய ஆண்டில் நாம் விளங்குவோமாக.

## விசா மறுப்பு

சுவிடன் Uppsala பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த Professor Peter Schalk என்பவர் டிசம்பர் மாதம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வந்திருந்தார். இவர் டிசம்பர் மாதத்திலும், புதிய வருடம் ஜனவரி மாதத்திலும் 9 விரிவுரைகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் வழங்க இருந்தார். ஆனால் .ஆறு விரிவுரைகளை நிகழ்த்திவிட்டு தமது விசாவைப் புதிப்பிப் பதற்காகக் கொழும்பு சென்றார். அவருக்கு விசா மறுக்கப்பட்டது. எனவே உடனடி யாக அவர் சுவீடனுக்குப் புறப்பட்டார். இவர் யாழ்ப்பாணத்தில் இருந்த காலத்தில் மகா வீரர் தினத்திலும், மற்றும் விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார் என்பதனால் அரசாங்கம் இவர் மீது கோபமடைந்திருந்ததாகக் கேள்விப் படுகின்றோம்.

## ஞாபகார்த்த ஆராதனை

காலஞ்சென்ற ராணி செல்வரத்தினம் அவர்கள் பேரில் ஒரு ஞாபகார்த்த ஸ்தோத்திர ஆராதனை வட்டுக்கோட்டையில் அவர் வாழ்ந்த இல்லத்தில் நடை பெற்றது. இந்த ஆராதனையிற் கலந்து கொள்வதற்காக அன்னாரின் மகள் நளினியும் அவர் தம் கணவர் Joe Rajaratnam அவர்களும் அவுஸ்திரேலியாவில் இருந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

### சிசில் ஜோன் ஜெயராஜா



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1929 | 2003 |
| ✝ | ✝ |
| 11 | 01 |
| ✝ | ✝ |
| 24 | 08 |

"உங்களிருதயம் கலங்காது இருப்பதாக"

அருள்திரு. திருமதி அசோக்குமார்
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

# போ! தகர்!

நான் ஆசிரிய கலாசாலையிற் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்த காலமது.

சமய சம்பந்தமான விஷயங்களில் எனக்குக் கொஞ்சம் ஈடுபாடு அதிகம். என்ன கதைத்தாலும் வேதத்திலிருந்து எடுத்துக் காட்டுகளுடன் பேசுவேன். இதனாற் றான் என்னவோ நண்பர்கள் என்னைப் "போதகர்!, போதகர்!" என்று அழைத்தார்கள். பட்டம் சூட்டினார்கள்.

சாதாரண உலக கஷ்டங்களில் உழலும் என்னை, வயதில் மிகவும் இளையவனான என்னை, வேதத்தில் மற்றவர்களைவிடக் குறைந்த அறிவுள்ள என்னை, என்னைவிட வயதில், அறிவில், ஆற்றலில் கூடிய உடன் மாணவ ஆசிரிய, ஆசிரியைகள் "போதகர்" என அழைக்கும்போது என்னையே நான் ஆராய்வேன். நான் இந்தப் பட்டப் பெயருக்குத் தகுதியானவன்தானா என்று எவ் வளவோ புனிதமான ஒரு தொழிலுக்கு உரிய அந்தப் பெயரைச் சொல்லி என்னை அழைக்கிறார்களே என்று எனக்கு உள்ளூர வருத்தம். ஆயினும் வெளிப்படையாகச் சொல்ல, நண்பர்களை அதட்ட மனம் வரவில்லை. "இழிவு சிறப்பு" என்று சொல் கிறார்களே அப்படியும் நண்பர்கள் கருதி என்னை அழைத்திருக்கலாமல்லவா?

இரண்டு வருடக் கலாசாலை வாழ்க்கை முடியும் நாட்கள் நெருங்கி விட்டன. நண்பர்கள் போல், சகோதரர்கள்போல் ஒரு குடும்பமாக வாழ்ந்த நண்பர்கள் பிரிவதென்றால் துக்கம்தானே!

அந் நாட்களில் மாணவர் கிறிஸ்தவ சங்கம், வேதப் பேச்சுப் போட்டி ஒன்று நடத்தியது. அதில் எனக்கு முதற் பரிசு கிடைத்தது. போட்டி முடிந்து விடுதிக்கு வந்ததும் எனது கட்டிலுக்கு அடுத்த கட்டிலில் இருக்கும் எனது உடன் மாணவ ஆசிரியர் "படிகளில் நீர் ஏறும் போதே எனக்குத் தெரியும் உமக்குத்தான் பரிசு என்று "போதக" ருக்குக் கிடைக்காவிட்டால் வேறு யாருக்குக் கிடைக்கும்!" என்றார். கொண்டுபோன எத்தனையோ குறிப்புக்களில் 5 நிமிடத்தில் ஒரு சில குறிப்புக்களைத்தான் காண முடிந்தது. முழுவதையுமே காண முடிய வில்லையே என்று துக்கப்பட்டுக் கொண்டிருந்த என் மனதுக்கு ஆசிரிய நண்பரின் பேச்சு எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றியது போல் இருந்தது. "மாஸ்டர்! பகிடிபண்ணுகிறதென்றாலும் இப்படிப் பகிடி பண்ணலாமா? "போதகர்" என்ற பட்டத் திற்கு நான் தகுதியற்றவன். இனிமேல் என்னை அப்படி அழைக்காதீர்கள். பிரிந்து போகிறபோது அன்பாகவே போவோம்" என்று அழாக்குறையாகக் கூறினேன். அப்போது அந்த ஆசிரியர் கூறிய மொழிகளே இக் கட்டுரை எழுத என்னைத் தூண்டியது.

"தம்பி! போதகர் என்று உனக்குச் சொன்னேன். ஏனென்றால், நாம் பிரிந்து உலகத்திற்குள் போகப்போகிறோம். அங்கே கேடுள்ள பிற கொள்கைகள்; மூடப் பழக்கவழக்கங்கள் நிறைய மக்களிடையே பரவியிருக்கின்றன. அவைகளை இளைஞராகிய நீர் தகர்த்தெறிய வேண்டும். உனக்குள்ள வேத அறிவாகிய தாலந்தைப் பாவித்து நமது கிறிஸ்த சமயத்தைத் தூற்றுபவர்களை அவர்களு டைய தர்க்கங்களை, வேதத்தில் தக்க சான்றுகள் எடுத்துக்காட்டித் தகர்த்து எறியவேண்டுமென நான் விரும்புகின்றேன். எனவேதான் "போ! தகர்!" என்று கூறினேன். பிழையாக விளங்கிக்கொள்ளாதே!" என்றார். அப்போதான் அவரின் எண்ணத் தூய்மையை அறிந்தேன்.

"போதகர்" என்ற சொல்லுக்கு அவர் கூறிய அர்த்தம் சரியோ பிழையோ தெரியாது. ஆனால் அது எனது வாழ்க்கையில் என்றும் மறக்கமுடியாத ஒரு அடையாளத்தை விட்டுச் சென்றுள்ளது. நான் எங்கிருந்தாலும் நண்பர் கூறிய கருத்தை மறவேன். கருத்துப்படி நடப்பேன்.

**- ஆசிரியப் பயிற்சிப் பாடசாலையில் கற்று அரங்கேறிய ஒருவர் எழுதியது -**

## மறுமைப் பிரவேசம்

### திருமதி தவமணி அருளானந்தம்



மட்டக்களப்பு கல்லாறையைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி அருளானந்தம் (ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்கள் 07-01-2005 அன்று வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையானார்.

அன்னார் காலஞ்சென்ற சித்திரபூபாலசிங்கம், கிருபையம்மா ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற அல்பிரட் அருளானந்தம் (ஓய்வு பெற்ற தபால் அத்தியட்சகர்) அவர்களின் அன்பு மனைவியும் Dr. அருள்வதனி (அமெரிக்கா) தவரஞ்ஜிற், (விரிவுரையாளர், தாவரவியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம், ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை சனிக்கிழமை (08-01-2005) பிற்பகல் 4-30 மணியளவில் நடைபெற்றது.

இந்த ஆராதனையை நவாலி திருச்சபை ஊழியன் வண. A.S. தேவ குணானந்தன், வண. A.V. இயேசுதாசன் உதவியுடன் நடாத்தினார்.

### திரு. எட்வேட் வேதாபரணம் ஞானப்பிரகாசம்

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சில்லாலையை வசிப்பிட மாகவும் கொண்ட எட்வேட் வேதாபரணம் ஞானப்பிரகாசம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்கள் 09-01-2005 அன்று கர்த்த ருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பேரின்பநாயகம், மைக்கேல் ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், ரூபியின் மாமனாரும், தர்மசீலன், ஆனந்த ராஜா, மனோன், காலஞ்சென்ற ஒப்பிலாமணி, எலிசபெத் சுமிர்த ரட்ணம், அருள்ஜோதி ஆகியோரின் சிறிய தகப்பனாரும் காலஞ்சென்ற வேதா பரணத்தின் சகோதரனுமாவார். நல்லடக்க வழிபாடு 10-01-2005 திங்கட்கிழமை சில்லாலை மேற்கு, செட்டிய குறிச்சியில் மாலை 3-30 மணிக்கு இடம்பெற்று, நல்லடக்கம் மாலை 4-30 மணியளவிற் வட்டுக்கோட்டை சேமக்காலையில் நடைபெற்றது.

இந்த ஆராதனையை வட்டுக்கோட்டை திருச்சபை ஊழியன் வண. D.S. சொலமன் அவர்களால் நடாத்தப்பட்டு, இரங்கல் உரையை அருட்திரு. T.S. யோசுவா நிகழ்த்தினார். பேராயர் ஆசிர்வாதம் கூறினார். நல்லடக்கம் வண. D.S. சொலமனினால் வண. P. பத்மதயாளனின் உதவியுடன நடத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Mullaitivu

## JDCSI Missionaries Visit Mullaitivu

Thursday, January 13, 2005

On Friday, January 7th, I went to Mullaitivu with Rev. S. C. Arnold, Beverly and Trevor Watson, and Asohan Amarasingham. All of us except Rev. Arnold have foreign passports and had not expected to be able to go to Mullaitivu, but Rev. Arnold was able to make special arrangements for us, and with a special handwritten pass from an LTTE official we were able to go, taking a good many boxes of medical supplies. One special item in the supplies was tetanus toxoid that had to be kept frozen until just before use. We picked it up at a pharmacy in Jaffna Town at 7:00 a.m., transported it in a cooler with frozen water bottles, and delivered it frozen at 12:30. The distance we traveled must have been less than 100 miles but some of the roads are bad and we had to stop at 5 checkpoints and go to an LTTE office to get the special pass which took close to an hour.

After delivering the medicines and picking up a long list of other medicines and equipment that are needed we visited one of the ten refugee camps that have been set up in schools by the TRO, the Tamil Rehabilitation Organization of the LTTE. There are approximately 1000 people in each camp, or about 200 families. This is the first phase of the assistance plan and it is almost complete. Only an occasional dead body is found now. All the refugees have been clothed, are being fed by communal kitchens, have living space in classrooms, and have access to medical care. The camp, which was located in Mulaithiru a few kilometers from the destroyed ghost town of Mullaitivu, gave the appearance of being very well run and I didn't find it distressing to walk around and look, and speak to the people through translation. Everyone had a ready smile in response to our smiles and sympathetic interest. They found us rather interesting, too!

Counseling is one of the greatest needs now that the basic bodily needs are cared for. Catholic priests and nuns who have some training are giving themselves over to the people as counselors and we were able to talk at length with Fr. Anpurasa, a priest well know to Rev. Arnold. We meet some of the children he is trying to help. A girl of 10 was hanging onto him and he told us that she has lost both her parents. He pointed out her two younger siblings. During the first few days after the tsunami she seemed to interact quite normally with others, but when families started to leave the camp she began to withdraw and she stopped talking altogether for a while. The Father has been able to get her to talk with him and to trust him and now she seems quite normal again, though clinging. He showed us pictures the children had drawn of the tsunami and many showed the water as black. The details were affecting: bodies without hand, heads in the water without bodies, people in trees and on housetops.

This community will have a very unnatural proportion of men, women, and children because such a large proportion of the deaths were among women and children. There are many men now without wives to be mothers to their children and they don't feel they can take care of the children. Many of the men speak of committing suicide. One man said that he cursed his ability to swim. Had he not been able to swim he would have died with the rest of his family and then everything would have been all right.

The TRO management is making plans for continued and more intensive counseling and making provisions for those who need specialized psychiatric care. Rev. Arnold hopes to make arrangements to send a team of counselors to Mullaitivu from counseling organizations in Jaffna, mostly headed up by Dr. Daya Somasundaram. Mr. Noel Vimalendran, Principal of Jaffna College, is a trained counselor and he will train some of the teachers at Jaffna College so they can go to affected areas to offer help, as will teachers from Uduvil Girls' College after they have the training Mrs. Shiranee Mills is planning to provide with the help of Dr. Somadunaram's counseling service.

After spending time with the people of the camp we were taken to meet an official of TRO who sat down with us and gave us a lot of information. Mullaitivu is a town of about 90% fishermen. The others are farmers and merchants. Many of the farmers have lost their crops because the ocean water invaded their paddy fields. We saw fields that were turning yellow because of the salt. Because the main livelihood is fishing the Phase 2 temporary housing and the Phase 3 permanent housing will be placed 300 to 500 meters from the sea. Reluctant as some of the people are to return to the sea, the reality is that that is their life.

Land is being cleared for Phase 2. Each family will get a small tent, two sets of clothing for each member, and a NFRI package. This is a start-up housekeeping kit for living independently in the tents. It will contain pots and pans, mats, sheets, towel, simple tools, and buckets, among other things. Facilities for each of the 13 refugee communities will include 1000 liter water tanks, 1 for each 10 families, toilets, a medical clinic, a pre-school, a public gathering place with furniture, and a generator. We were given only a few cost amounts, only these large ones: they have spent Rs50 million on Phase 1, and when Phase 3 is completed they expect the cost to be Rs750 million. UNHCR is providing the 1815 tents they need and ZOA, OXFAM, and a third NGO are providing water and sanitation facilities.

Phase 3 will provide each family with a 400 sq. ft. cement block house. They will construct roads and schools. Help to get the fishermen back to work will be given throughout the rehabilitation process but that will be a main goal for Phase 3. They will be providing three kinds of nets, those for shallow, medium, and deepwater fishing. There is another very large net that a whole community can share that costs Rs750, 000. The LTTE will also be providing motors and boats. Small boats will often be shared by 2 families whereas larger trawlers will be operated by larger cooperatives.

There is an urgent need to get the transit camps out of the schools as the 2005 academic year began January 10. TRO is hoping to have the schools vacated and ready for their intended purpose in 2 weeks. In these current transit camps there are 5557 families and 24,557 individuals. Of these 40% are "directly affected" which means they have lost everything, and 60% are affected by fear. These latter families will be expected to eventually return to the homes and properties that they still have. I was impressed, and I think the others were too, by the efficiency of the TRO's care of the people, but I don't know how much input the people themselves have into what happens to them during this rehabilitation process.

Rev. Jude Sutharshan returned on January 7 from a town near Batticaloa where he had gone on January 3 with15 of the youth from Sathiyapuram. They traveled in circles in order to reach one devastated church community because they kept encountering bridges washed out by the tsunami or roads so deeply flooded from the recent heavy rain that they couldn't be forded. Once there they worked for three days, shoveling dirt in the hot sun or rain to fill in huge chasms and holes caused by rushing water. I saw his video of an area that once had 200 houses and not one brick is left. But the church is standing and looks to be in good repair!!

On January 11 the seminarians from Christian Theological Seminary, Rev. T. Thevanesan, Rev. Benjamin Jeyarajah, and Dr. D. Carr set our on a three week work assistance program in Mullaitivu and Batticaloa. They are contributing their labour and compassionate spirit in an effort to help the battered and traumatized people of those communities.

The local community spirit that came to the immediate aid of the tsunami victims is justifiably getting world acclaim. It may be thanks to this Sri Lankan generosity that the epidemics of disease that were feared have not happend. We are in pain for the people who are suffering so much, but we are proud of the way the people of Sri Lanka came immediately to the assistance of their neighbors.

**Grace Bunker**





Manipay Parish Hall built at a cost of Rs. 750,000. This was declared opened on Sunday 12th December by our Bishop Rt. Rev. Dr. S. Jebanesan.

## Tellipallai Church Closed on X'mas Day

The Minister and members of Tellipallai Church were greatly disappointed that they could not conduct the Christmas service on the 25th December 2004 in their village church. Even though they obtained permission to go to Tellipallai Church on Christmas from the security forces they could not conduct worship inside the church because it was used as a store – house for building material and a place to make concrete bricks by Union College authorities.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL

# POST TSUNAMI: NEED FOR A N EW PHASE IN MINISTRY

In the early hours of December 26, a sudden surge of a ferocious seismic surge of tidal wave hit the coastal belt of Southeast Asian region killing thousands, scarring memories and changing the popular perception of the sea. The initial quake and the numerous aftershocks released a massive surge of water that spread from the coast of the Indonesian island of Sumatra and traveling at more than 500 miles per hour, swept north and westward, gathering momentum as it sped forward. Within the next few hours, it had wreaked havoc in many countries including ours. It came at a time when everyone was getting into a mood to celebrate New Year. The death toll began climbing since Sunday morning and the number given by 'Newsweek' is 41,000. It should be more. Millions have been displaced and many thousands are still missing.

It is true that the country as a whole is torn into pieces by this sudden surge. It is a national disaster. But it has affected the Tamils living in the NorthEast in a special way. The devastation caused by this unexpected and unprecedented tidal surge has exacerbated the suffering of a people who have been discriminated for half a century and forced to face a war for more than twenty years. This happened at a time when people were slowly readjusting themselves from the recently faced severe floods. The problems faced with and the difficulties experienced by the Tamils at this critical juncture have nothing to do with any person, any people or government. Through this experience one is called upon to see "the suffering other" and the Tamil people are in full solidarity with the Sinhala and Muslim brothers and sisters affected by the tsunami.

The temptation is that journalists, foreign dignitaries, diplomats and others may overlook the predicament of the Tamil people. Both the media as well as foreign aid have for the last few decades been mostly South-centred and were intransigent of the NorthEast. Amidst a mass destruction, the agonized people have the legitimate fears whether foreign media people as well as well-wishers have focused and still focus their attention to places easily approachable. In the Northeast, specially in Mullaitivu and areas south of Batticaloa, there are people who walk around days after tsunami visiting hospitals and make-shift camps and morgues checking the rows of bodies wondering if one of them is someone they lived with. Some bodies lie uncovered in the sun, some with arms sticking up in the air. Fears of an epidemic outbreak loom large in these areas. Cases of diarrhea and gastroenteritis have been reported.

True, many have survived. BUT the agony of the survivors is acute. The future, or the life after tsunami is something we need to ponder. Every disaster also creates "new space" for ministry. The church is called upon to a new form of ministry in the wake of this 'killer tsunami.' The churches might have survived and the diocesan activities might not have been hindered. The question is whether the church lives for itself or for the people at large. Dr Preman Niles' phrase, "People of God Among Peoples of God," evokes a broader and larger framework for mission. Agonizing cries of the helpless, shattered families, the shattered debris of the cherished dwellings are the forceful reminders of the task ahead of us. Already traumatized people are traumatized further. The task that lies ahead of us is not only to rebuild what has been ruined- towns, villages and institutions- but mainly to help rebuild the ethos of the helpless people who suffer irreparable loss. Can life ever limp back to normalcy to such people? Yes, it can. It can only if we have the will. Post Traumatic Stress Disorder (PTSD) is a serious psychiatric condition triggered by exceptionally stressful events like tsunami. One may think that fear and anger may be the normal reactions of the victims. But it is the mass depression that is quite scary. For the survivors, who faced the shock and horror, the hard times begin now only. Catastrophes of this nature always strain a person's capacity to absorb shock. Devastation of this stupendous scale can bring about unimaginable psychological trauma.

We are called for a re-examination of ecclesiology. Being with the people, sitting at the places where they are, listening to their anguish (not forcing to speak), showing compassion, ensuring basic physical and psychological needs, providing company are some aspects of this 'new phase' of ministry. This ministry does not show statistics nor beating drums about 'achievements.' These elements are part of ongoing mental healing process. When people are haunted by "flashbacks" and as a result undergo psychosomatic aches and pains and feel restless, the church needs to focus on this new sphere of ministry by identifying and making use of competent people who could provide professional psychiatric care and sustained treatment.

As a person visited the worst-hit Mullaitivu District, the Editor herself wants to stress that the only thing we can do for the beginning is to listen to them, to their expression of horrific experience in order to facilitate the natural grieving process. As Prof. Daya Somasundaram, a specialist in Psychiatry, said it is important that the relief workers provide prompt physiological First-Aid and alleviation of mental compression to such people in addition to the other kinds of assistance given to them. Relief and Rehabilitation should go on but they need to include this first and foremost component that makes shattered people rise up against all odds.

*Thaya.*

## *Letter to friends........*

*I am happy to see your concern and sympathy for the Tsunami victims of Sri Lanka and other Asian countries.*

*In Sri Lanka alone according to official statistics 29,744 persons have lost their lives. In the North East province of the island where the Jaffna Diocese has most of its churches and institutions 16,656 have died and 18,481 persons are reported missing.*

*During the past few days, I have been visiting some of the refugee camps for Tsunami victims and wish to share with you the following urgent needs of the refugees.*

1. ***Counselling:*** *In some villages all the children under the age of 12 have been swallowed up by the sea. In a nursery where 150 orphans under five were living all but 17 fell victim to the fury of the sea.*

   *There are men and women in the camps who have lost all the members of their families and are all alone in this world. Some of them are mentally disturbed while others are suffering from insomnia. Roman Catholic priests and nuns have gone to these camps to do counselling.* ***Listening ministry is the need of the hour.*** *I would urge the women's fellowships to organize counseling ministries for the victims. We will be able to pay for their travel and accommodation.*

2. ***Medicines:*** *Medicines have to be supplied to these camps without interruption for another six months. Doctors who are serving here are fearful that there will be many cases of pneumonia and malaria in the camps. Surgical and sterilizing equipment are needed urgently in the camps. Antibiotics and other strong medicines are in short supply even in Colombo. We may have to purchase them in India and send them to the refugee camps.*

3. ***Toilet facilities:*** *Toilet facilities are in a deplorable state. For example in the Mullivallai Tamil Vidayalayam Camp, where there are one thousand refugees both female and male, there is only one lavatory for the entire camp. The people who are in charge have stated that they will provide the land if people would volunteer to build the toilets. Our attention must be directed towards construction of many toilets around the camps.*

4. ***New clothes:*** *Because of psychological reasons the refugees and organizers refuse to accept used clothes. What they need is new clothes, new beds sheets, new mats, new pillows and new towels. These have to be supplied in large numbers for the next months. Sanitary towels have to be supplied for females.*

5. ***Pure drinking water is also scarce.*** *Tsunami has upset the drainage system and brought many dead bodies near wells. We have to supply them with good drinking water and the equipment to purify water in their areas.*

6. ***Protein:*** *Children who have lost their parents need nutritious food. The TRIPOSHA and SAMAPOSHA produced in Sri Lanka, important tonics and strengthening food have to be given to them. These will have to be bought in Colombo or in India. Toys also are needed.*

*For the next six months – our task is to satisfy the urgent physiological needs of the Tsunami survivors and provide them with the necessary equipment to bring a semblance of normalcy in their lives. Once they overcome their trauma we will be able to send them to their villages with the necessary material to build help them build their houses and equipment to start the work.*

*If you wish to join us in this ministry you may draw a cheque in favour of American Ceylon Mission A/C 111 903 1801, Standard Chartered Bank and send it to the Treasurer Jaffna Diocese of the Church of South India, Vaddukoddai. All letters and cheques will be acknowledged.*

*Yours in Christ's ministry*
*Bishop S. Jebanesan*
*Jaffna Diocese*
*Church of South India.*

*Bishop's House*
*Vaddukoddai*
*January 3, 2004*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by: American Ceylon Mission Press, Jaffna.